# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**


# அரையாண்டு -மதிப்பீட்டுத் தாள்

# 2020 - 2021

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 09

சுட்டெண்:...............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சார்பெழுத்துகளின் எண்ணிக்கை

அ) 247 ☐ ஆ) 217 ☐

இ) 30 ☐ ஈ) 18 ☐

2. ‘பாறை பிளந்து பயன் விளைவிப்பான்..’ இதில் பாறை எனக் குறிப்பிடப்படுவது

அ) கடல் ☐ ஆ) குளம் ☐

இ) நிலம் ☐ ஈ) மலை ☐

3. தனிநாயகம் அடிகள் ‘தமிழர் பண்பாட்டுக் கழகம்’ என்ற அமைப்பைத் தோற்றுவித்த ஆண்டு

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

அ) 1952 ☐ ஆ) 1954 ☐

இ) 1950 ☐ ஈ) 1951 ☐

4. ‘கோவேத’ என்ற முத்திரை காணப்பட்டது

அ) ஆனைக்கோட்டையில் ☐ ஆ) பூநகரியில் ☐

இ) கந்தரோடையில் ☐ ஈ) வன்னியில் ☐

5. இடையினமெய்யெழுத்துக் கூட்டம்

அ) ங்ஞ்ண்ந்ம்ன் ☐ ஆ) ய்ர்ல்வ்ழ்ள் ☐

இ) க்ச்ட்த்ப்ற் ☐ ஈ) ய்ர்ல்ந்ம்ன் ☐

TEDC

6. களிறு என்பது

அ) ஆண் சிங்கம் ☐ ஆ) பெண் சிங்கம் ☐

இ) ஆண் யானை ☐ ஈ) பெண் யானை ☐

7. விளா + காய் என்பதைச் சேர்த்தால்

அ) விளாங்க்காய் ☐ ஆ) விளாகாய் ☐
இ) விளாங்காய் ☐ ஈ ) விளாக்காய் ☐

8. மகாவம்சம் சுட்டெரிக்கப்படவேண்டும் எனக் கூறிய சிங்களத் தத்துவமேதை

அ) சிறிலால்கொடிகார ☐ ஆ) லயனல் ஜெயதிலக ☐
இ) லயனல் சரத் ☐ ஈ ) ஈ.டபிள்யூ.அதிகாரம் ☐

9. இரட்டைக்கிளவிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நறநற ☐ ஆ) ஊர்ஊர் ☐
இ) பலபல ☐ ஈ ) ஏறுஏறு ☐

10. தனிநாயகம் அடிகளாரின் இயற்பெயர்

அ) வரதன் ☐ ஆ) மயில்வாகனன் ☐
இ) சேவியர் ☐ ஈ ) தேவநேசன் ☐

11. நாகரின் அரசு இருந்த இடம்

அ) கல்யாணி ☐ ஆ) நாகதீபம் ☐
இ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) கொழும்பு ☐

12. புலம்பெயர்ந்த சிறுவர்கள் தமிழை விரும்பிக் கற்கின்றனர். இதில் வேற்றுமை உருபு ஏற்ற சொல்

அ) சிறுவர்கள் ☐ ஆ) தமிழ் ☐
இ) விரும்பி ☐ ஈ ) கற்கின்றனர் ☐

13. மெய்முன் உயிர் புணர்தலுக்கு எடுத்துக்காட்டு

அ) நூலகம் ☐ ஆ) பாற்குடம் ☐

இ) பலாக்கனி ☐ ஈ) கோவில் ☐

14. பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்... எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்ற நூல்

அ) புறநானூறு ☐ ஆ) திருக்குறள் ☐

இ) மூதுரை ☐ ஈ) நல்வழி ☐

15. 'இஞ்சை வா' என்ற பேச்சு வழக்குச் சொல்லைச் செவ்வழக்காக மாற்றினால்

அ) இங்கை வா ☐ ஆ) இஞ்சைய் வா ☐

இ) இஞ்சே வா ☐ ஈ) இங்கே வா ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

16. கயல்விழி என்ற உவமை அணியில் வந்துள்ள உவமேயம்

அ) கயல் ☐ ஆ) விழி ☐

இ) அழகு ☐ ஈ) நீளம் ☐

17. 'புதியதொருவீடு' என்ற நாடகத்தை எழுதியவர்

அ) சக்திமுற்றப்புலவர் ☐ ஆ) மோசிகீரனார் ☐

இ) மகாகவி உருத்திரமூர்த்தி ☐ ஈ) பாரதியார் ☐

TEDC

18. இலக்கணவகையால் தமிழ்மொழியில் உள்ள சொற்கள்

அ) இரண்டு ☐ ஆ) நான்கு ☐

இ) மூன்று ☐ ஈ) ஐந்து ☐

19. தன்னந்தனி என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) அடுக்குத்தொடர் ☐
இ) அடுக்கிடுக்குத் தொடர் ☐ ஈ) இணைமொழி ☐

20. விசயன் இலங்கைக்கு வருமுன்னரே அங்கு வாழ்ந்த ஆதிக்குடிகள்

அ) பறங்கியர் ஆங்கிலேயர் ☐ ஆ) சிங்களவர் பறங்கியர் ☐
இ) சிங்களவர் ஆங்கிலேயர் ☐ ஈ) இயக்கர் நாகர் ☐

21. உழவன் வயலில் விளைந்த பயிர்களைப் பார்த்து மகிழ்ந்தான். இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள பெயரெச்சம்

அ) விளைந்த ☐ ஆ) உழவன் ☐
இ) பார்த்து ☐ ஈ) மகிழ்ந்தான் ☐

22. இராவணனைக் காட்டிக் கொடுத்த இரண்டகன்

அ) இராமன் ☐ ஆ) கும்பகண்ணன் ☐
இ) தசரதன் ☐ ஈ) வீடணன் ☐

23. உலகில் முதல் மாந்தன் தோன்றிய இடம்

அ) குமரிக்கண்டம் ☐ ஆ) அமெரிக்கா ☐
இ) அவுத்திரேலியா ☐ ஈ) ஐரோப்பா ☐

24. நான் நூலகத்துக்குச் சென்று நூல் வாசித்தேன். இச் சொல்லியம்

அ) கூட்டுச் சொல்லியம் ☐ ஆ) கலப்புச் சொல்லியம் ☐
இ) தனிச் சொல்லியம் ☐ ஈ) ஏவற் சொல்லியம் ☐

25. மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற பாடத்தில்

குறிப்பிடப்படும் தொழில்

அ) நெசவுத்தொழில் ☐ ஆ) மீன்பிடித்தொழில் ☐

இ) உழவுத்தொழில் ☐ ஈ ) கடற்றொழில் ☐

26. பொற்றாலி என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பொன் + தாலி ☐ ஆ) பொற் + றாலி ☐

இ) பொற் + தாலி ☐ ஈ ) பொற்த் + தாலி ☐

27. பொம்பரிப்பு என்னும் இடம் அமைந்துள்ள மாவட்டம்

அ) புத்தளம் ☐ ஆ) கொழும்பு ☐

இ) யாழ்ப்பாணம் ☐ ஈ ) வவுனியா ☐

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

28. நாகதீபம் பற்றிக் குறிப்பிடும் நூல்

அ) வளையாபதி ☐ ஆ) மணிமேகலை ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) சீவகசிந்தாமணி ☐

29. பகுதியையும் இடைநிலையையும் இணைக்கும் சொல்

அ) சாரியை ☐ ஆ) உருபு ☐

இ) சந்தி ☐ ஈ ) விகுதி ☐

TEDC

30. தனிநாயகம் அடிகள் ____________ மொழிகளில் திருக்குறளை

மொழிமாற்றுவித்தார்.

அ) தெலுங்கு, சீன ☐ ஆ) உருது,மலாய் ☐

இ) கிரேக்கம், சீன ☐ ஈ ) சீன, மலாய் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கல், உலோகம், மரம் போன்றவற்றைக் கொண்டு கண்ணையுங் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை. சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் இரண்டாகப் பிரிக்கலாம். அவை முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என்பன ஆகும். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்கள் முழுஉருவச் சிற்பங்கள் என அழைக்கப்படுகின்றன. அவ்வாறு இல்லாமல் முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்கள் புடைப்புச் சிற்பங்கள் என அழைக்கப்படுகின்றன. இத்தகைய சிற்பங்களைக் கோவில்களின் கோபுரங்கள், தூண்கள், நுழைவாயில்கள் போன்ற இடங்களில் பார்க்கலாம். சிற்பிகள் சிற்பஇலக்கண மரபைப் பின்பற்றிக் கலைநயத்துடன் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால் அவர்களைக் ‘கற்கவிஞர்கள்’ என்றும் சிறப்பித்து அழைக்கின்றனர்.

1. யாரை ‘கற்கவிஞர்கள்’ என்று சிறப்பித்து அழைக்கின்றனர்?

______________________________

2. உருவ அமைப்பு அடிப்படையில் சிற்பங்களை எத்தனையாகப் பிரிக்கலாம்?

______________________________

3. சிற்பிகள் எப்படிச் சிற்பங்களை வடிவமைக்கின்றனர்?

______________________________

4. புடைப்புச் சிற்பங்களை எங்கே பார்க்கலாம்?

______________________________

5. கண்ணையுங் கருத்தையும் கவரும் கலை எது?

______________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்?

2. பெருங்கற்கால மக்களின் தொழில்கள் இரண்டினைத் தருக.

3. மீனவர் எதைக்கொண்டு காலமறிந்து கடலோடுகின்றனர் ?

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

4. ஆனைவிழுந்தான் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சிற்பங்கள் எவற்றை ஒத்திருந்தன?

5. நெல்லுப்பொதி சுமந்து கூத்தாடும் பயிர் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?

6. தனிநாயகம் அடிகளார் இறுதியாக வெளியிட்ட நூல் எது?

TEDC

7. எந்நாட்டில் இன்றும் திருவாசகம், திருப்பாவை ஓதப்படுகிறது?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொற்களைப் பொருத்தமாக எழுதி, கவிதையை முழுமையாக்குக.**

## ஒற்றுமை

| | | |
|---|---|---|
| வெல்லலாம் | பிரிந்து | ஒற்றுமையால் |
| அன்பும் | துன்பம் | |

அம்மா அப்பா ________________ தான்
அண்ணன் தங்கை ஒற்றுமை வளரும்
அம்மா பிள்ளை ஒற்றுமையால் தான்
________________ பாசமும் பின்னிப்படரும்

ஒற்றுமை இன்றேல் உலகம் அழியும்
வேற்றுமையாலே ________________ வளரும்
இரண்டு படாத ஒற்றுமையால் தான்
எதையும் என்றும் ________________

இனிய ஒற்றுமை வேண்டும் போது
இளைத்தவன் கூட உடற்பலம் பெறுவான்
இரண்டாய் ஆகிப் ________________ விடாமல்
என்றும் ஒற்றுமை பேணிக் காப்போம்

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பிடித்தனன் என்ற சொல்லின் பகுதி,சந்தி, விகுதி என்பவற்றை எழுதுக.

   பகுதி ________________

   சந்தி ________________

   விகுதி ________________

2. மாறுபடு புணர்ச்சி எத்தனை வகைப்படும்? அவற்றுள் இரண்டிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   ________________________________

   ________________________________

3. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

   உரிச்சொல் ________________

   வினாச்சொல் ________________

   வினைமுற்று ________________

4. கடலறிவு என்ற உவமை அணியின் உவமானம், உவமேயம், பொதுத்தன்மை என்பவற்றைத் தருக.

   உவமானம் ________________

   உவமேயம் ________________

   பொதுத்தன்மை ________________

TEDC

5. பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு ஒவ்வொரு சொல்லியம் எழுதுக.

   தாயகம் ________________________________

   வெற்றி ________________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிட மொழியில் மாற்றி எழுதுக.**

ஈழத்தில் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் தொன்று தொட்டு வாழ்ந்து வருகின்றனர். 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்களால் இந்தியாவிலிருந்து தமிழர் அழைத்து வரப்பட்டனர். அவர்களைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்குப் பயன்படுத்தினர். இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்ட தமிழர், இன்று ஈழத்தின் மலையகப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் மிகவும் வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றனர். ஆனாலும் தமது மொழி,கலை,பண்பாடு போன்றவற்றைப் பேணுவதில் அக்கறை உள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC

புள்ளிகள் 05

7) **தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ மீண்டும் தொடங்கும் மிடுக்கு
- ✸ இலங்கையின் முதற்குடிகள்
- ✸ கோடைகாலம்

புள்ளிகள் 20

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
TEDC